**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.86/2023**

| Deposition of Name | பாபு | Prosecution | LW-3 as PW-2. |
|---|---|---|---|
| Father Name | சின்னப்பன் | Defence | |
| Village | வைத்தீஸ்வரன்கோயில் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 70/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**09.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வாழை இலை எடுக்கும் வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அன்றைய நாள் நான் வேலைக்கு செல்லவில்லை. போலிசார் என்னை விசாரித்து எனது பெயரை எழுதிக்கொண்டார்கள்.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் வண்டியில் வாழை இலை அறுக்கும் போது வேலை செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். அவர் மகேந்திரா தோஸ்ட் என்ற நான்கு சக்கர வாகனத்தை வைத்துள்ளார் என்றால் சரிதான். கடந்த 24.10.2021 ம் தேதி இரவு 10.00 மணியளவில் ஆஜர் எதிரிக்கு சொந்தமான TN 50 L 5038 என்ற வாகனத்தில் இலைகளை ஏற்றிக்கொண்டு பயணம் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி அன்றைய தினம் ஆஜர் எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கிழக்கே அன்னப்பூர்ணா ே ஹாட்டல் அருகே வேகத்தடையில் ஏறி இறங்கும்போது பின் கதவில் அமர்ந்து வந்த தினேஷ் கீழே விழுந்து அடிபட்டாரா என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியுடன் நான் வேலை செய்வதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**